**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

07.08.2025

O.S. No. 276/2022

P.W. 1 திரு. M.S. மணி

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது முதலில் வழக்குரையில் வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்ணாக 1/11, 1/31 மற்றும் 1/122 என்றுதான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். பிராதின் பல இடங்களிலும் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அதன்பிறகு I.A. 4/2024 தாக்கல் செய்து 1/122 என்பதை 122 என திருத்தம் செய்தோம் என்றால் சரிதான். அதேபோல வழக்கின் (e) பரிகாரத்தையும் அப்போதுதான் முதன் முறையாக கேட்டோம் என்றால் சரிதான். எங்கள் வழக்கை பொறுத்து ஒரு உறுதி தன்மை இல்லாமல் மாறி மாறி சங்கதிகள் கூறி வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. O.S. 828/2004 விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா ஒரு வழக்கை நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். வேலாயுத தம்பிக்கு இந்த வழக்கின் பட்டிகை சொத்து அதாவது பழைய சர்வே எண். 1/1, 1/31 மற்றும் 122 ஆகியவை பாத்தியப்பட்டது என காண்பிக்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் வேலாயுத தம்பி வெங்கடாசல ஐயருக்கு தாவா சொத்து குறித்து எந்த ஒரு

ஆவணமும் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. O.S. 537/2002 தீர்ப்பை எதிர்த்து விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு 15.09.2022 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பழைய சர்வே எண். 1/1, 1/31 மற்றும் 122 என்பது எப்போது முதன் முதலில் தாவா சொத்துக்கு கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. பழைய செற்றில்மெண்ட் ரெஜிஸ்டர்தான் எல்லா நில உரிமை சம்பந்தப்பட்ட வருவாய் ஆவணங்களுக்கு அடிப்படை என்றால் சரிதான். பழைய செற்றில்மெண்ட் ரெஜிஸ்டரில் பழைய சர்வே எண். 1/1 என்பது கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில் என காளம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய செற்றில்மெண்ட் ரெஜிஸ்டரில் பழைய சர்வே எண். 1/31 என்பது கணக்கு சாவடி, களஞ்சியம், விறகுபுரை என காளம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய செற்றில்மெண்ட் ரெஜிஸ்டரில் பழைய சர்வே எண். 122 என்பது முசாவாரி பங்களா என காளம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய சர்வே எண். 1/1, 1/31 மற்றும் 122 ஆகியவை பகவதிபிள்ளை கொச்சம்மா பெயரில் இல்லை என்றால் சரிதான். அந்த சர்வே நம்பரில் உள்ள 37 சென்றுக்கு பகவதிபிள்ளை கொச்சம்மா பெயரில் பட்டாவும் கிடையாது என்றால் சரிதான். பகவதிபிள்ளை கொச்சம்மா ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜாவின் மகள் என காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எந்த ஆவணமும் கிடையாது என்றால் சரிதான். வெங்கடாச்சலம் ஐயர் கோரிக்கையின்பேரில் தாவா சொத்தின் பட்டா அவர் பெயரில் மாற்றப்படாததால்

அந்த சொத்தை வேறு யாருக்கும் விற்க உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 06.07.1981 தேதியிட்ட வெங்கடாசல ஐயர் மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங்ற்க்கு எழுதி கொடுத்த கிரய ஆவணம் Principal Sub Treasury, திருவனந்தபுரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ல் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்து தவிர மற்றொரு சொத்து குறித்தான முன் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. ஏன் முடியாது என்றால் ஆவணங்கள் எதுவும் வெங்கடாச்சல ஐயர் கொடுக்கவில்லை. அவ்வாறு அந்த சொத்து குறித்து முன் ஆவணங்கள் எதுவும் வெங்கடாச்சல் ஐயர் கொடுக்கவில்லை என்று வா.சா.ஆ. 7 ஆவணத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு Schedule B ல் காட்டப்பட்டுள்ள உளியழித்துராவில் 20 Sq. M. இடம் சர்வே எண். 1666 Part என்ற சொத்து உண்மையிலேயே அந்த இடத்தில் கிடையாது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. O.S. 537/2002 ல் L.R. பாலசுப்பிரமணியம் சாட்சியம் அளிக்கும்போது மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் மற்றும் விஸ்வ ஹிந்து வித்யா கேந்திரா பெயரில் தாவா சொத்திற்கு நில வரி செலுத்தியது கிடையாது என கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தொியாது.

O.S. 828/2004 என்ற வழக்கு 28.07.2011 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தொியாது. O.S. 394/2012 and O.S. 851/2004 ஆகிய இரண்டு வழக்குகளும் எங்களால் நாகர்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யபட்டது என்றால் அது எனக்கு

தொியாது. O.S. 537/2002 ஏற்பட்ட தீர்ப்புக்கு மேல் நாங்கள் சொல்வது போல 3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த தீர்ப்பின் படிதான் M.P. 2/2012 மனு தாக்கல் செய்யப்பட்டு அதன்பேரில்தான் எங்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தாவா சொத்தின் சுவாதீனம் 14.07.2023 அன்று Assistant Commissioner HR&CE, Nagercoil ல் அவர்களால் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். வெங்கடாச்சல ஐயருக்கு கன்னியாகுமரி பகவதியம்மன் கோவில் நிர்வாகிகள் 1970 ல் குருபூஜை மற்றும் பகவத் கீதை சொல்லி கொடுக்க அனுமதி வழங்கியதை தவறாக பயன்படுத்தி போலி ஆவணங்களை தயார் செய்து தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்து O.S. 537/2002 ஐ தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. சரோஜா தம்பி M.P. 2/2012 ல் R.W. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து எதுவும் தொியாது என அந்த சாட்சியத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். பிாிவு 78/4 இந்து அறநிலையத் துறை சட்டத்தின் கீழ் இணை ஆணையர் HR&CE க்கு அதிகாரம் உண்டு என்றால் சரியல்ல. சட்டத்தில் கொடுக்கபட்டுள்ள அதிகாரத்தின் படியும், இணை ஆணையரின் உத்தரவு படியும் முறையான சட்ட விதிகளை பின்பற்றி தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடமிருந்து 4 வது பிரதிவாதி எடுத்துள்ளார் என்றால் சரியல்ல. M.P. 2/2012 ல் ஏற்பட்டுள்ள உத்தரவு 29.03.2022 என்றால் சரிதான். அந்த தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் அந்த உத்தரவிற்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்க

வேண்டும் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ஆனால் இந்த வழக்கு அவ்வாறு 6 மாத காலத்திற்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு தாவா சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து பயன் படுத்திய வகையில் உரிய நஷ்ட ஈடு வழங்க கடமைபட்டவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தொியாது. என்னிடம் காட்டப்படுவது வாதி விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவினால் சங்கரன் என்பவருக்குகொடுக்கப்பட்ட ஒரு ரசீது 26.02.2022 தேதியிட்ட ரசீது என்றால் சரிதான். அது ஒரு நன்கொடை ரசீது. **அது பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படுவது விஸ்வ ஹிந்து வித்யா கேந்திராவினால் பகவதியம்மன் கோவில், கன்னியாகுமரி Executive Officer, Bhagavathiamman Temple, Kanniyakumari and Deputy Commissioner, Incorporated and Unincorporated Temples, Suchindrum ஆகியோர் மீது விடுமுறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த O.S. 152/2004 பிராதின் நகல் என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும்தான் கேட்டிருந்தோம் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. முதன்மை உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவிலில் வாதிகள் தாக்கல் செய்திருந்த O.S. 394/2020 ன் பிராதின் நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படுவது சீராய்வு

மனு 26/2022 என இந்து அறநிலையத்துறை ஆணையர் முன்பாக எங்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவின் நகல் மற்றும் அதில் பிரதிவாதிகளால் பெறப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எங்கள் சார்பாக வழக்கறிஞர் கணேஷ் என்பவர் 11.04.2022 அன்று 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் மற்றும் அந்த கடிதம் வந்த தபால் உறை என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 5 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படுவது 05.04.2022 ல் வழக்கறிஞர் கணேஷ் எங்கள் சார்பாக 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் மற்றும் மனு நகல் மற்றும் தபால் உறை என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ. 6 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கில் கேட்டுள்ள எந்த பரிகாரத்தையும் கேட்பதற்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வெங்கடாசல ஐயர், வேதாந்தம், அனந்தபத்மன், மகரிஷி இன்டர்நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் வேதிக் சயின்ஸ் அன்ட் லேனிங் ஐ சேர்ந்த சுப்பிரமணியம் ஆகியோர் சேர்ந்து போலியாக பல ஆவணங்களை உருவாக்கி கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை அபகரிக்க வேண்டி திட்டமிட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின் கீழும் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 3 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளுக்கு எதிராக செலவு தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1, 2 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) :-**

1, 2 மற்றும் 4 ஆம் எதிரிகள் தரப்பில் மேலே செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.